# “ஒலுவில் கிராமத்தில் பயில்விலுள்ள கவிகளின் ஆற்றுகையும் மக்கள் ஈடுபாடும்”

LIBRARY
0 9 OCT 2020
EUSL SRI LANKA

செல்வி : காலிதீன் வாரிதா
பதிவு இலக்கம் : EU/IS/2013/AC/144
சுட்டிலக்கம் : CS 5294

இவ்வாய்வானது இளங்கலைமானி நுண்கலை சிறப்பு பட்டத் தேர்வின் ஒரு பகுதியினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது

FAC 763
Project Report
Library - EUSL

EASTERN UNIVERSITY SRI LANKA
PER ARDUA AD SCIENTIAM

நுண்கலைத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

2019

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# ஆய்வுச்சுருக்கம்

நவீன உலகு எமக்களித்த நவீனத்திற்குள்ளும் நாகரீகத்திற்குள்ளும் வாழும் நாம் எமது அடையாளத்தையும் தனித்துவத்தையும் வரலாற்றையும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் காட்டி நிற்கும் பாரம்பரியங்களை அறிவதிலும் பாதுகாப்பதிலும் நிலைநிறுத்தச் செய்வதிலும் ஆவணப்படுத்துவதிலும் அசிரத்தையாகவே உள்ளோம். இதன் விளைவாகவே இன்றைய இளம் தலைமுறையினர் பாரம்பரியங்கள் பற்றி அறியாமலேயே காலணியக் குழந்தைகளாகவும் கறுப்புத்தோல் போர்த்திய வெள்ளையர்களாகவுமே வளர்க்கப்படுகின்றார்கள். பாரம்பரியக் கலைகளை அதிலும் குறிப்பாக வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்த நாட்டார் பாடல்களையும், முஸ்லிம்களின் அடையாளமாகவும் அழகியலாகவும் ஆற்றுகைக் கலையாகவும் சமூகத் தொடர்பாடலுக்கும் உள ஆற்றுப்படுத்தலுக்கும் முக்கியமாகக் காணப்படக்கூடிய கவிபாடும் மரபை பாதுகாக்க வேண்டிய காலத்திலும் அது தொடர்பான விழிப்புணர்வூட்டல், ஆவணப்படுத்தல், அறிமுகமாக்கல் போன்ற செயற்பாடுகளின் அவசியம் உணரப்பட்ட சூழ்நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எமது முதுசங்களாகக் காணப்படும் இக் கவிபாடும் மரபினைப் பாதுகாத்தல் அவசியமாகும்.

ஒலுவில் பிரதேசத்தில் பயில்விலிருக்கும் கவிகளைக் கொண்டு இவ்வாய்வின் நோக்கத்தை தெளிவுபடுத்தியதோடு ஆய்வுப்பிரச்சினையையும் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. கவிபாடுவதில் வல்லமை பெற்றிருந்த இக்கிராமத்தவர்களை நேர்காணல் செய்தல், கவிபாடுதல் பற்றி அறிந்துகொள்ளல், அதன் அழகியல், தனித்துவம், பாடப்படும் சந்தர்ப்பம், சமூகப் பின்னணி, சமூகத் தொடர்பாடலுக்கு பங்காற்றும் விதம் பற்றி அறிந்துகொள்ளல் பின்னர் அவற்றை சமூகத்திற்கு வெளிக்கொணரச் செய்யும் வகையிலும், ஆற்றுகையை பிரபல்யப்படுத்தல், ஆவணப்படுத்தல் நோக்கில் சமகாலத்தில் கவிபாடுதல் தொடர்பான பயில்வு முறையாகவும் இப்பாரம்பரியத்தை பாதுகாக்கும் நோக்கிலும், நிலைபெறச் செய்யும் நோக்கிலும், கவிபாடுனர்களைக்கொண்டு ‘‘ஆற்றுகைச் சாரல்’’ எனும் நிகழ்த்துகையை ஒழுங்குபடுத்தி இந்நிகழ்த்துகையினூடாக ஆய்வின் நோக்கங்களும் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டதோடு இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் இக்கவிபாடுதலின் அவசியம், நிலைநிறுத்தச் செய்வதன் நோக்கம், தேவை, அவசியம் உணர்த்தப்பட்டதோடு சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

இன்றைய நவீனத்தின் அதீத வளர்ச்சியினாலும் நவீனமயமாக்கப்பட்ட உலகத்தில் மக்கள் சமூகத்தொடர்பாடல் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் போன்ற விடயங்களுக்கும் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனால் ஏற்படும் பிரச்சினைகளும் உறவுகளுக்கிடையிலான விரிசல்களும் அதிகரித்த இந்த காலப்பகுதியிலேயே பாரம்பரியத்தின் தேவைப்பாடும் முன்னோர்களின் சமூகத்தொடர்பாடல், உள ஆற்றுப்படுத்தல், மகிழ்வான, ஆரோக்கியமான, மனநிறைவான வாழ்வியலின் தந்திரங்கள் உபாயங்கள் அறியப்படுதல் என்பன தற்காலத்தில் அவசியப்படுகின்றன. இதனாலேயே இது தொடர்பான ஆய்வுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான முக்கிய தேவைப்பாடானது இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வும், பயில்வு முறையும், ஆர்வமும் தேவையும் அவசியமாகும். இது தொடர்பான பயில்வுகள் காணப்படுகின்றபோதிலும் இதன் தேவை இன்னும் அதிகமாகவே உள்ளது. எனவேதான் இவற்றுக்கான வழிகாட்டல்களும் பயில்வுமுறைகளும், ஆவணப்படுத்தல்களும், ஆற்றுகைப் பிரபல்யப்படுத்தல்களும் பரிந்துரைகளும் இவ்வாய்வினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| **1.** | **முதலாம் அத்தியாயம்** | **பக்கங்கள்.** |
| **1.1.** | ஆய்வுத் தலைப்பு | 01 |
| **1.2.** | ஆய்வு அறிமுகம் | 01 |
| **1.3.** | ஆய்வுப் பிரதேசம் | 02 |
| **1.4.** | ஆய்வு தொடர்பான பிரச்சினைகள் | 03 |
| **1.5.** | ஆய்வின் கருதுகோள் | 03 |
| **1.6.** | ஆய்வு நோக்கங்கள் | 04 |
| **1.7.** | ஆய்வு முறையியல் | 04 |
| **1.8.** | ஆய்வு மூலங்கள் | 04 |
| **1.9.** | ஆய்வின் முக்கியத்துவம் | 05 |
| **1.10.** | இலக்கிய மீளாய்வு | 05 |
| **1.11.** | ஆய்வு அமைப்பு | 07 |
| **2.** | **இரண்டாம் அத்தியாயம்** | |
| 2.1. | ஒலுவில் பிரதேச அறிமுகம். | 08 |
| 2.2. | சமூக கட்டமைப்பு | 11 |
| 2.2.1. | வாழ்க்கைமுறை | 12 |
| 2.2.2. | சமயம் | 12 |
| 2.2.3. | பண்பாடு | 14 |
| 2.2.4. | தொழில் | 15 |
| 2.2.5. | மொழிவழக்கு | 16 |
| 2.3. | கலைப் பாரம்பரியம். | 18 |
| 2.3.1. | கிழக்கிலங்கையில் கவிமரபு. | 20 |

**3. மூன்றாம் அத்தியாயம்**

3.1. ஒலுவில் பிரதேசத்தில் கவிகளின் அறிமுகம் 36

3.2. ஒலுவில் பிரதேசத்தில் பயில்விலுள்ள கவிவடிவங்கள். 38

3.3. கவி பாடுவதற்கான சந்தர்ப்பங்கள். 41

3.4. கவியும் சமூகத் தொடர்பாடலும். 46

**4. நான்காம் அத்தியாயம்**

4.1. கவியின் பயில்வுமுறை 93

4.2. சமகாலத்தில் கவி பெறும் முக்கியத்துவம் 100

**5. ஐந்தாம் அத்தியாயம்**

5.1. முடிவுரை 114

5.2. பின்னிணைப்புகள் 123